DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 158/2024**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : செந்தில்குமார்
Father/ Husband Name : மதிமன்னன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.11.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது சிந்தாமணியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். கடந்த 13.01.2022-ம் தேதி காலை 07.30-08.00 மணியளவில் நாச்சாங்குளம் சென்று அ.சா.2னின் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 வந்து என் வீடு உடைந்துகிடக்கிறது வந்து பாருங்கள் என்று கூப்பிட்டார். போய் பார்த்த போது கிரில்கேட் பூட்டு உடைந்திருந்தது. போலீஸ் வருவதற்காக காத்திருந்த போது உள்ளே இருந்து புகையாக வந்தது. உள்ளே இருந்த மரக்கதவும் திறந்தநிலையில் சாத்தப்பட்டிருந்தது. அதை தள்ளி உள்ளே போன போது சொத்துபத்திரம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவை எரிந்து புகையாக புகைந்து கொண்டிருந்தது.

2. பிறகு அதை தண்ணீர் ஊற்றி அணைத்து விட்டு மின்சார இணைப்பை துண்டித்தோம். அ.சா.1 சாமி படத்திற்கு அருகே ரூ.5000/- பணம் வைத்திருந்ததாகவும் அதை காணவில்லை என்றும் சொன்னார். பிறகு போலீசார் வந்துவிட்டார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்று மனு கொடுத்துவிட்டு வந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D**. பூர்ணிமா.,**B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
**தேவகோட்டை.**